க.ஹா.மு. ஸதக்கத்துல்லாஹ் (K.H.M.Sathakathulla)

**மழைப் பிறப்பு (The birth of Rain) and other poems**

<u>மழைப் பிறப்பு</u>

❖ **வானம்**
**அழுவதை**

**மழை**
**விழுவதை**

**புல்**
**எழுவதைத்**

**தரிசிக்கும்**
**தருணத்தில்**

**கசிந்து**
**ஊற்றெடுக்கிறது**
**உயிர்ச்சுனை.**

❖ **அடித்துத் துவைத்தது**
**மழை**
**என்**
**நிராசைகளையும் சேர்த்து.**

- **மழை**

**தழுவத் தழுவ**

**உடல்**

**கழுவ கழுவ**

**உயிர்**

**நழுவ நழுவப்**

**புதிது புதிதாய்**

**புனர் ஜென்மம்.**

**பயணம்**

**ஞானத் தேடலில்**

**எடுத்து வைக்கும்**

**முதல் அடி.**

**பிரியமுள்ளவர்களைப்**

**பிரிந்து பின்**

**சேருவதை உணர்த்தும்**

**பால பாடம்.**

**அன்பின்**

**அடர்த்தியை**

**அறிய வைக்கும்**

**ஆன்ம சோதனைக் களம்.**

**எங்கே போகிறோம்?**

**எப்போது திரும்புவோம்?**

**… … … … …**

**… … … … …**

**… … … … …**

**இப்படியான கேள்விகளிலும்**

**அவற்றின் பின்னே**

**ஒளிந்திருக்கும் விடைகளிலும்**

**துடித்து நிற்கிறது**

**உறவுகளின் உயிர்.**

**முன்னும் பின்னுமாய்**

**கடந்த தூரமும்**

**கடக்க வேண்டிய**

**தொலைவும்**

**மிச்சமிருக்கின்றன**

**இன்னும்…**

**காலக் கயிறு**

**சுழற்றி விட்ட**

**பம்பரம் போல்**

**சுற்றிக் கொண்டு**

**அலைகிறது மனது.**

**தொடரத் தொடரப்**

**பயணங்கள்...**

**தொலைவு கடக்கும்**

**துயரங்கள்.**

**கடந்து செல்லும்**

**காலத்தை**

**நினைவுப் பெட்டகத்தில்**

**உறைய வைக்கும்**

**உற்சாக அனுபவம்.**

**நினைவுச் சாளரம் திறந்து**

**நிகழ்காலத்தின்**

**வெளிச்ச ரேகை பரவ**

**உள்ளுக்குள் ஒளியேற்றும்**

**உன்னத உணர்வு – பயணம்.**

**கரை தொடும்**

**அலைகள்**

**கடலிடம் மீள்வது போல்**

**தினம் தினம்**

**தொடர்கிறது**

**தேடலுக்கான பயணம்.**

**மன அடுக்குகளின்**

**இடுக்குகளில்**

**வெளிச்சம் பாய்ச்ச**

**அவசியம் தேவை**

**பயணம்.**

**நரை**

**முதுமை**

**முகவரியின்**

**முதல் வரி.**

**அந்தி(ம)க் கதிரின்**

**ஆரம்ப**

**நிறப்பிரிகை.**

**ஒழுகும் ஆயுளை**

**உணர்த்தும்**

**ஒளிக் கீற்று.**

**தழும்பும் இளமை**

**தடம் மாறாமல்**

**தடுக்கும் சமிக்ஞை.**

**தடுமாறிய தருணங்களை**

**மீள்பார்த்துச்**

**சரிபார்க்கச் சொல்லும்**

**மனக்கணக்கு.**

**காலன் பதிவேட்டில்**

**புதுக்கணக்குக்கான**

**ஆதிச் சுழி.**

<u>பசியின் ராகம்</u>

**யாசகம் கேட்கும்**

**வழிப்போக்கனின்**

**புல்லாங்குழலிலிருந்து**

**பொங்கிப் பிரவகித்துக்**

**கரையுடைக்கிறது**

**பசியின் சங்கீதம்.**

**<u>தாய் மடி</u>**

**காருண்யம்**

**பொங்கும்**

**கனிவுப் பார்வை.**

**அன்பு ததும்பி**

**வழியும்**

**தொடுகை.**

**நேசத்தை**

**அடர்த்தியாக்கும்**

**கேசம் வருடல்.**

**மனச்சுமையை**

**இறக்கி வைக்கும்**

**துறைமுகம்**

**தாய்மடி.**

<u>மழலைக் குறும்புகள்</u>

- **அம்மாவின்**

  **புடவைத் தலைப்பில்**

  **முகம் மறைத்துக்**

  **கனிவோடும்**

  **கலவரத்தோடும்**

  **ஓரப் பார்வை**

  **பார்க்கும் குழந்தை**

  **சொல்லாமல் சொல்கிறது**

  **வெட்கத்தின் இலக்கணம்.**

- **பெற்றோரின்**

  **கோபத்தை**

  **வலுவிழக்கச் செய்யும்**

  **மென் ஆயுதம்**

  **பிள்ளைகளின்**

  **இதழோரக் குறுஞ்சிரிப்பு.**

- **பேருந்துப் பயணம்.**

**ஜன்னலுக்கு வெளியே**

**வேடிக்கை**

**பார்த்துக் கொண்டிருக்கிறது**

**குழந்தை.**

**இமைக்காமல்**

**இரசித்துக் கொண்டிருக்கிறேன்**

**நான்.**

<u>மழை நடப்பு</u>

- **மழை ஓய்ந்ததும்**

  **சாரலடிக்கிறது**

  **மரத்தடியில்.**

- **ஒரே குடையின் கீழ்**

  **நாம்.**

  **இதயங்களை இணைத்து**

  **நனைக்கிறது**

  **அன்பின்**

  **பெருமழை.**

- **ஓயாது**

  **மேலும் கீழும்**

  **விரைந்து ஏகும்**

  **மின்தூக்கி**

  **ஒருபோதும்**

  **சொன்னதில்லை**

  **முத்தங்களின் இரகசியத்தை.**

<u>**அன்றாட அலுவல்**</u>

- **ரயில் நிலையங்களிலும்**

  **கடைத்தொகுதிகளிலும்**

  **வசீகரச் சொற்களில்**

  **விளித்து**

  **சினேகம் வழிய**

  **மென்னகை பொங்கும்**

  **முகத்துடன் அணுகும்**

  **விற்பனைப் பிரதிநிதிகளைச்**

  **சந்தேகமும் சங்கடமும்**

  **தவிர்த்து**

  **இயல்பாகப் புறக்கணிப்பது**

  **எளிதல்ல**

  **எப்போதும்.**